செய்தி வெளியீடு எண்:1028 நாள்:02.11.2021

செய்தி வெளியீடு

**பாதுகாப்பு துறையில் உற்பத்தியை மேம்படுத்தும் பொருட்டு TIIC, CII, மற்றும் SIDM ஆகியோரிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து ஆனது.**

சென்னை , திருச்சி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஓசூர் ஆகிய ஐந்து முனையங்களைக் கொண்ட தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் வழித்தடமானது, பாதுகாப்பு உற்பத்திச் சூழல் அமைப்பில் தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், மாநில இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வையான 2030ஆம் ஆண்டுக்குள் தமிழகப் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றி நனவாக்குவதில் பாதுகாப்புத் துறையின் உற்பத்தி முக்கியப் பங்கு வகிக்கும்.

மாநிலத்தின் முதன்மை நிதி நிறுவனமும் மாநில அரசாங்கத்தின் முக்கியப் நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், பாதுகாப்பு உற்பத்தி சூழலை மேம்படுத்துவதற்கான அதன் வளர்ச்சிக்கு வித்திடும் பொருட்டு , இந்திய பாதுகாப்பு உற்பத்தியாளர்களின் சங்கம் (SIDM) மற்றும் இந்திய தொழில்களின் கூட்டமைப்பு (CII) ஆகியவற்றுடன் ஒன்று சேர்ந்து. தமிழகத்திலுள்ள MSME நிறுவனங்கள், பாதுகாப்பு உற்பத்தியில் இணைந்து பணியாற்றிட உள்ளது. இது தொடர்பாக, TIIC, CII மற்றும் SIDM இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 01.11.2021 அன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக முதல் கட்டமாக 5 முனையங்களில் ஒவ்வொரு முனையத்திலும் சாம்பியன் தொழிற்கூடங்கள் கண்டறியப்பட்டு பாதுகாப்பு துறையின் தேவைகளை பூர்த்தி செய்ய வழிவகை செய்யும் பொருட்டு அவைகளின் மேலாண்மை மற்றும் தொழில்நுட்பத்திறனை மேம்படுத்தும் வகையில் தேவையான வழிகாட்டுதலும் உதவிகளும் வழங்கப்படும். மேலும் இந்த தொழில் நிறுவனங்களின் திறன் மேம்பாடு, கட்டமைப்பு வசதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யும் வசதி போன்ற தேவைகளையும் பூர்த்தி செய்ய வழிவகுக்கும்.

இந்நிகழ்ச்சியில் திரு ஹன்ஸ்ராஜ் வர்மா இ.ஆ.ப, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர். TIIC, திரு முருகானந்தம் இ.ஆ.ப அரசு முதன்மை செயலாளர், தொழில்துறை, திரு பங்கஜ் குமார் பன்சால் இஆ.ப, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், TIDCO, திரு ஜெயந்த் பட்டேல், தலைவர், எஸ்.ஐ.டி.எம், மற்றும் முதுநிலை நிர்வாக துணைத்தலைவர், L&T யின் பாதுகாப்பு வணிகம், டாக்டர் எஸ் சந்திரகுமார், சிஐஐ தமிழ்நாடு மாநில கவுன்சில், திரு சுனில் K மிஸ்ரா, டைரக்டர் ஜெனரல், எஸ்.ஐ.டி.எம். திரு N.M.P. ஜெயேஷ் , மண்டல இயக்குநர், சிஐஐ தெற்கு மண்டலம், திரு S. கண்ண ன், தலைவர் மற்றும் இயக்குநர் சிஐஐ தமிழ்நாடு ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்குபெற்றனர்.

புகழ்பெற்ற பாதுகாப்பு விஞ்ஞானி டாக்டர் ஹ. சிவதாணு பிள்ளை கலந்துகொண்டு. தமிழ்நாடு பாதுபாப்பு தொழில்வழிதடம் திட்டத்தை மாபெரும் வெற்றியடையச் செய்வது குறித்து தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். திரு M.V. ரமேஷ் பாபு தலைவர் CODISSIA. திரு கே. வேல்முருகன், தலைவர் HOSTIA , திரு P. ராஜப்பா, தலைவர் TIDITSSIA, திரு T. நலங்கிள்ளி துணைத்தலைவர் AIEMA மற்றும் திரு S. கோவிந்தன். தலைவர் SADISSTIA ஆகியோர் அந்தந்த தொழில் சங்கங்கள் சார்பாகவும் மற்றும் 5 முனையங்களிலிருந்து சாம்பியன் தொழிலகங்கள் ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9